

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.8.2024) தலைமைச் செயலகத்தில், கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகத்தின் சார்பில் 55 கோடியே 43 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள், மீன்வளத்துறை சார்பில் 112 கோடியே 27 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள கட்டடங்கள் மற்றும் தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழக வளாகத்தில் 12 கோடியே 82 இலட்சத்து 57 ஆயிரம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள உழவர் பயிற்சி மையக் கட்டடம் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், மீன்வளம் – மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் அனிதா ஆர். இராதாகிருஷ்ணன், தமிழ்நாடு மீன் வளர்ச்சிக் கழகத் தலைவர் ந.கௌதமன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் கே. கோபால், கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், தமிழ்நாடு டாக்டர் ஜெ. ஜெயலலிதா மீன்வளப் பல்கலைக்கழகத்தின் துணை வேந்தர் முனைவர் என். பெலிக்ஸ், தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக துணை வேந்தர் டாக்டர் கே.என். செல்வகுமார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர் – தமிழ்நாடு முதலமைச்சர் தளபதியார் அவர்களின் ஆணைக்கிணங்க, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் விழுப்புரம் மாவட்டம் விக்கிரவாண்டி சட்டமன்றத் தொகுதி விக்கிரவாண்டி ஒன்றியம், பனையபுரம் ஊராட்சியில் கலைஞரின் கனவு இல்லம் திட்ட பயனாளி களுக்கு வீடு கட்டுவதற்கான பணி ஆணை வழங்கும் விழாவில் உயர்கல்வித்துறை அமைச்சர் முனைவர். க.பொன்முடி கலந்து கொண்டு பயனாளிகளுக்கு பணி ஆணை வழங்கி சிறப்பித்தார்கள். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.சி.பழனி, சட்டமன்ற உறுப்பினர்கள் அன்னியூர் அ.சிவா, டாக்டர்.இரா. லட்சுமணன், மாவட்ட ஊராட்சிக் குழுத் தலைவர் ம.ஜெயச்சந்திரன், ஒன்றியக்குழு தலைவர் சங்கீதா அரசி ரவிதுரை, ஒன்றிய கழகச் செயலாளர்கள் ஜெய.ரவிதுரை, வேம்பி ரவி, ஜெ.ஜெயபால் துணைத் தலைவர் ஜீவிதா ரவி ,மாவட்ட கவுன்சிலர் மீனா வெங்கடேசன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

### முதல்வரின் மக்கள் நலத் திட்டங்களை மக்களிடம் கொண்டு சேர்ப்போம் - தீர்மானம்!

# தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.கழக செயற்குழுக் கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் சு.கல்யாணசுந்தரம் எம்.பி. சிறப்புரை!

தஞ்சாவூர், ஆக. 22 - தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டம் 20.08.2024 அன்று மாலை 4.00 மணிக்கு கும்பகோணம், மாவட்ட கழக அலுவலகத்தில் அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் கும்பகோணம் மாநகரச் செயலாளரும், துணை மேயருமான சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி மற்றும் ஒன்றிய, பகுதி, பேரூர் செயலாளர்கள், மாநில பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

கூட்டத்தில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

கழக முப்பெரும் விழா தந்தை பெரியார் அவர்கள் பிறந்தநாள் விழா மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்தநாள் விழா, கழகம் தொடங்கிய நாளன்று முப்பெரும் விழாவாகவும், கூடுதலாக முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் 100வது ஆண்டு பிறந்தநாள் நிறைவு விழாவாக கழகம் தொடங்கிய சென்னையில் முப்பெரும் விழா நடைபெற இருப்பதாலும், முப்பெரும் விழாவை சிறப்பிக்கும் வகையில் செப்டம்பர் 15 அன்று பேரறிஞர் அண்ணா படத்திற்கு மாலை அணிவித்தும் கழக கொடிகம்பங்கள் புதுப்பிக்கப்பட்டு கழக இருவண்ண கொடியினை ஏற்றியும் மற்றும் திராவிட மாடல் அரசை திறம்பட நடத்தி இந்தியாவே திரும்பி பார்க்க வைக்கும் திட்டங்களை நிறைவேற்றி வரும் தமிழக முதல்வர் தளபதி அவர்களின் மக்கள் நல திட்டங்களை சுவர் விளம்பரம் எழுதி சிறப்பித்தும் மற்றும் மாவட்டம் முழுவதும் தெருமுனை கூட்டங்களை நடத்தி விளக்குவது என்றும் மற்றும் தஞ்சை வடக்கு மாவட்டத்தின் சார்பில் சென்னையில் நடைபெறும் முப்பெரும் விழாவில் அதிக அளவில் பங்கேற்று சிறப்பிப்பது என்று தீர்மானிக்கப்படுகிறது.

திராவிட முன்னேற்ற கழக தலைவராக பொறுப்பேற்ற பிறகு கழக தலைவர் தளபதி அவர்கள் எதிர்கொண்ட 2019 நாடாளுமன்ற தேர்தல் 2020 ஊரக உள்ளாட்சி தேர்தல் 2021 சட்டமன்றத் தேர்தல் மற்றும் 2022 நகர்ப்புற உள்ளாட்சி தேர்தல் 2024ல் நடைபெற்ற நாடாளுமன்ற தேர்தல் மற்றும் அன்மையில் நடைபெற்ற விக்வாகிரவாண்டி தேர்தல் களங்களில் நாற்பதும் நமதே என்ற முழக்கத்தை முன்வைத்து வியூகங்கள் அமைத்து ஓய்வறியாமல் உழைத்து கழக தோழர்களை திராவிட மாடல் அரசின் நலத்திட்டங்கள் மக்கள் இடத்தில் எடுத்து சென்றும் 2024 நாடாளுமன்ற தேர்தல் களத்தில் தமிழ்நாடு - புதுச்சேரி மாநிலங்களில் நாற்பதுக்கும் நாற்பது என்ற மகத்தான வெற்றியை தேர்தல் களத்தில் பெற்று தந்ததுடன் நாடும் நமதே என்ற முழக்கத்தால் மதவாத அரசியலுக்கு எதிராக முனைப்புடன் செயலாற்றி நாடாளுமன்ற மக்களவையில் வலிமை மிக்க எதிர்கட்சியாக உருவாக்கியும், கழக தலைவர் நம் நெஞ்சமெல்லாம் நிறைந்த கழக தலைவர் தளபதி அவர்கள் எழுதிய தென் திசையின் தீர்ப்பு என்றும் வரலாற்று நூலினை மாநகர, ஒன்றிய, பேரூர் கழக, கிளை கழக செயலாளர்கள், கழக தோழர்கள் அனைவரும் வாங்கி படித்து மகிழ வேண்டும் என்று இந்த கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

தமிழகத்தில் ஐந்து முறைமுதலமைச்சராகவும், பதிமூன்று முறை சட்டமன்ற பேரவை மற்றும் மேலவை உறுப்பினராகவும் களம் கண்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்ற தலைவர், தந்தை பெரியார், பேரறிஞர் அண்ணா அவர்களின் கனவை நிறைவேற்றியவர், இந்திய அரசியலில் பல பிரதமர்களையும், இந்திய ஜனாதிபதிகளையும் உறுவாக்கிய தலைவர் கலைஞர் சிறப்பை போற்றுகிற வகையில் 100 ரூபாய் நினைவு நாணயம் வெளியிடப்பட்ட நிகழ்வில் முத்தாய்ப்பாக நாணயத்தில் தமிழ் வெல்லும் என்ற வாசகத்துடன் தமிழை செம்மொழியாக்கிய வரலாற்று சிறப்பை போன்று தமிழ் வெல்லும் என்ற வாசகத்தை இடம் பெற செய்து நாணயம் வெளியிட அதற்கு முயற்சிகளை செய்த தமிழக முதல்வர் தளபதி அவர்களும், நாணயம் வெளியிட்ட ஒன்றிய அரசிற்கு நன்றியை தெரிவித்து மாவட்ட கழகத்தின் சார்பாக நன்றியை தெரிவிப்பது என்று தீர்மானிக்கிறது.

திராவிட மாடல் கொள்கை, மக்களை தேடி முதல்வர் திட்டம், தமிழ் புதல்வன் திட்டம், பெண்களுக்கு இலவச பஸ் பயணங்கள், மகளிர் உதவித் தொகை, கல்லூரி மாணவர்களுக்கு உதவித்தொகை திட்டம் போன்ற மக்கள் மனதில் இடம் பெறுகின்ற மகத்தான் திட்டங்களை செய்து மக்களிடத்தில் நற்பெயரை பெற்று இருக்கிற வகையில் எந்த ஒரு வீட்டை எடுத்துக்கொண்டாலும், அந்த வீட்டில் யாராவது ஒருவராவது பயனடையும் வகையில் திட்டங்கள் தீட்டி நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டு வருகிறது. ஆகவே சுணக்கமில்லாமல் மாநகர, ஒன்றிய, பேரூர் கழக கிளை கழக தோழர்கள் வார்டு கிளைகள் தோறும் செயற்குழு கூட்டம், பொது உறுப்பினர்கள் கூட்டம் நடத்தி 2026 சட்டமன்ற தேர்தலில் நம்முடைய இலக்கு 200 தொகுதிகள் என்று நாம் சும்மா இருந்திடாமல் மக்களின் நலத்திட்டங்கள் எதிர்கால திட்டங்கள், மாநில உரிமைகளை பெற்று தரும் இயக்கம் என்ற நற்பெயரை பெற்று தரும் என்ற நம்பிக்கையை மக்களிடத்தில் கொண்டுபோய் சேர்க்கவேண்டுமாய் மாநகர, ஒன்றிய, பேரூர் கழக கிளை கழக செயலாளர்கள் உறுதி ஏற்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

தஞ்சை வடக்கு மாவட்ட செயலரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் அவர்கள் குளிர்கால கூட்டதொடரில் வருகிற மகாமக விழாவுக்கான அடிப்படை பணிகள் விவசாயிகள், மீனவர்கள் வாழ்வாதார பிரச்சனைகள் மற்றும் மாணவர்கள், தொழிலாளர்கள் என அனைத்து தரப்பினருக்காகவும், நமது மாவட்டத்திற்கு மட்டுமின்று, தமிழகம் இல்லாமல் ஒட்டு மொத்த இந்தியாவிற்காகவே மாநிலங்கவையில் குரல் எழுப்பியதோடு, ஏற்கனவே வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட தூத்துக்குடி, நெல்லைக்கு நிதி உதவி வேண்டியும் தமிழ்நாட்டிற்கான நிதி பங்கீடு வேண்டியும், மாநில சுயாட்சி கொள்கைகளை வழியுறுத்தி சிறப்பாக உரையாற்றிய மாவட்ட கழக செயலாளருக்கு வாழ்த்துக்களையும், பாராட்டுகளையம் தெரிவிப்பது என்று இக்கூட்டத்தின் வாயிலாக தீர்மானிக்கப்படுகிறது.

கழக தலைவர் தளபதி அவர்களால் அமைக்கப்பட்ட தி.மு.க ஒருங்கிணைப்பு குழுக்கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட முடிவின்படி வரவிருக்கும் 2026 சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் பொருட்டு தங்கள் மாவட்டத்தில் உள்ள மாவட்ட, மாநகர, ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள் தங்கள் பகுதியில் ஒரே நபர் இரண்டு நிர்வாக பொறுப்புகளை வைத்து இருப்பவர்கள் பட்டியலை வழங்கி தாமாக முன்வந்து ஒரு பொறுப்பில் விலகி அடுத்தவர்களுக்கு வாய்ப்புகள் வழங்க உதவிடுமாறும் ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்தின்படி உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டு கொள்ளப்படுகிறது. அதைபோல் நமது மாவட்டத்தில் உள்ள 23 சார்பு அணிகளுக்கும் இதுவரை நியமிக்கப்படாமல் உள்ள மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர் கழகங்களுக்கு தகுதியான அந்த அணிக்கு தொடர்புடைய நபர்களையும் மற்றும் கழகத்தில் எவ்வித பொறுப்பும் இல்லாமல் இருப்பவர்களை கண்டறிந்து பட்டியல் தயார் செய்து உடனடியாக மாவட்ட கழகத்திடம் வழங்கிட வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்கிறது.

கழக தலைவர் நம்முடைய நெஞ்சம் எல்லாம் நிறைந்து இருக்கிற உயிர்நாணைய தலைவர் கலைஞர் அவர்களின் வரலாற்றை அடுத்த தலைமுறையினருக்கு எடுத்து செல்லுகின்ற வகையில் அவர் மேற்கொண்ட ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட மக்களின் பணிகளை நினைவு படுத்தும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களின் சிலையை சட்டமன்ற தொகுதிவாரியாகவும் முடிந்த அளவு ஒன்றிய அளவிலும் பேரூர் கழகம் மற்றும் கிளை கழகங்கள் தோறும் சிலைகள் அமைப்பது என்றும் மற்றும் முப்பெரும் விழாவை முன்னிட்டு தலைவர் கலைஞர் சிலை, பேரறிஞர் அண்ணா சிலை, தந்தை பெரியார் சிலைகளை சுத்தம் செய்து வர்ணம் பூசி இருவண்ண கொடிகள் கட்டி மலர் மாலை அணிவித்திட வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்கிறது.

தஞ்சை வடக்கு மாவட்ட தி.மு.க செயற்குழு கூட்டத்தில் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.



கள்ளக்குறிச்சி மாவட்டம் சங்கராபுரம் ஒன்றியம் பொய் குணம் ஊராட்சியில் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் வடக்கு மாவட்டக் கழக செயலாளர் தா.உதயசூரியன் எம்.எல்.ஏ. கலந்துகொண்டு பொதுமக்களிடம் இருந்து கோரிக்கை மனுக்களை பெற்றார், இதில் அரசு அதிகாரிகள், துறை சார்ந்த அலுவலர்கள், உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள், பொதுமக்கள், மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கிளைக் கழக நிர்வாகிகள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

### பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து

# கடலூர் மாவட்டத்தில் அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆய்வு!

## ஆசிரியர்-மாணவர்களின் கோரிக்கைக்கு உடனடி நடவடிக்கை! அதிகாரிகளுக்கு அறிவுறுத்தல்!

கடலூர், ஆக. 21- பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி 234/77 ஆய்வுப் பயணத்தின் கீழ் கடலூர் மாவட்டத்தில் நேற்று (20.08.2024) பல்வேறு பகுதியில் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து தொடர் ஆய்வுகளை மேற்கொண்டார்.

முதலமைச்சர் அவர்கள் ஆட்சி பொறுப்பேற்றது முதல் கல்விக்கு முக்கியத்துவம் அளித்து பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். கொரோனா தொற்று பரவல் காலத்திலும் பள்ளி மாணாக்கர்களின் கற்றல் திறனை ஊக்குவிக்கும் வகையில் இல்லம் தேடி கல்வி திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு பயனடைந்தனர்.

மேலும், பள்ளிகளின் உட்கட்டமைப்பு வசதிகளுக்கு முக்கியத்துவம் அளித்து பணிகள் நடைபெற்று வருகிறது. மாணவர்களின் உயர்கல்வியை ஊக்குவிக்கும் வகையில் நான் முதல்வன் திட்டம், 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை பயிலும் அரசு மற்றும் அரசு உதவிபெறும் பள்ளி மாணவர்களுக்கு காலை உணவுத் திட்டம், 8 வயதுக்கு உட்பட்ட அரசுப் பள்ளி மாணவர்கள் அடிப்படை கணிதத் திறனுடன், பிழையின்றி எழுத, படிப்பதை உறுதிசெய்யும் விதமாக எண்ணும் எழுத்தும் திட்டம் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பள்ளிக் கல்வித்துறை வாயிலாக செயல்படுத்தப்பட்டு வருகிறது.

முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலின்படி மாநிலத்தில் உள்ள அனைத்து சட்டமன்ற தொகுதிகளிலும் அரசின் வாயிலாக பள்ளிகளில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் மற்றும் பள்ளிகளின் செயல்பாடுகள் குறித்து 234ஃ77 ஆய்வுப் பயணத்தின் கீழ்; நேற்று (20.08.2024) நெய்வேலி, பண்ருட்டி, குறிஞ்சிப்பாடி, கடலூர், புவனகிரி, காட்டுமன்னார்கோயில், திட்டக்குடி ஆகிய சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட பள்ளிகள் மற்றும் கடலூர் மாவட்டத்தில் கட்டப்பட்டுவரும் புதிய தகைசார் பள்ளிக் கட்டுமானப் பணிகளையும், மாணவர்களுக்கான புதிய விடுதி கட்டுமானப் பணிகளையும் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

இவ்வாய்வில் மாணவர்களுக்கு நடைபெற்ற வகுப்பினை பார்வையிட்டு அவர்களின் கற்றல் திறன் குறித்து ஆய்வு செய்தார். பள்ளிகளில் ஆசிரியப் பெருமக்கள் தெரிவிக்கும் கோரிக்கைகள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு கல்வி அலுவலர்களுக்கு ஆணையிட்டார். மேலும், பள்ளி வகுப்பறைகள் மற்றும் வளாகங்கள் தூய்மையாக பராமரிக்கப்படுகிறதா என்பது குறித்து பார்வையிட்டு ஆய்வு செய்து தலைமை ஆசிரியர் மற்றும் ஆசிரியர்களுக்கு பல்வேறு ஆலோசனைகளை வழங்கினார்.

அவ்வகையில் நெய்வேலி சட்டமன்ற தொகுதியில் ஆய்வுக்குட்பட்ட ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளியில் பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க உடனடி நடவடிக்கையாக அங்குள்ள புதர்கள் முற்றிலும் அகற்றப்பட்டு தூய்மையான பள்ளி வளாகம் ஏற்படுத்தப்பட்டது.

## மயிலாடுதுறை மாவட்டத்தில்

## ஒன்றிய, நகர, பேரூர் தி.மு.க பொது உறுப்பினர்கள் கூட்டம் !

## நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., அறிவிப்பு !



கழகத்தலைவர், தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி அவர்களின் அறிவுறுத்தலின்படி மயிலாடுதுறை மாவட்டத்தில் உள்ள ஒன்றிய, நகர, பேரூர் வாரியாக பொது உறுப்பினர்கள் கூட்டம் கீழ்க்கண்ட அட்டணைப்படி அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழக அவைத்தலைவர்கள் தலைமையிலும் ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முன்னிலையிலும் நடைபெற உள்ளது. இந்த கூட்டத்தில் மாநில, மாவட்டக் கழக நிர்வாகிகள், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள், தலைமை செயற்குழு உறுப்பினர்கள், பொதுக்குழு உறுப்பினர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள், கலந்துக்கொள்ள உள்ளனர். இந்த கூட்டத்தில் அந்தந்த ஒன்றிய, நகர, பேரூர் கழகத்தை சேர்ந்த மாவட்ட பிரதிநிதிகள், சார்பு அணிகளின் நிர்வாகிகள், கிளை, வார்டு கழக செயலாளர்கள், நிர்வாகிகள், கழக மூத்த முன்னோடிகள், உள்ளாட்சி அமைப்பு பிரதிநிதிகள், கழக செயல்வீரர்கள் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பிக்க கேட்டுக்கொள்கிறேன்.

| நாள் & நேரம் | ஒன்றிய, நகர, பேரூர் | இடம் |
|---|---|---|
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் வடக்கு ஒன்றியம் | அறிஞர் அண்ணா திருமண மண்டபம், செம்பனார்கோவில். |
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை மாலை 4.00 மணி | மயிலாடுதுறை நகரம் | விஜய் மஹால், மயிலாடுதுறை |
| 25.08.2024 ஞாயிற்றுகிழமை மாலை 6.00 மணி | சீர்காழி மேற்கு ஒன்றியம் | சீர்காழி ஒன்றிய தி.மு.க அலுவலகம் சீர்காழி தென்பாதி. |
| 26.08.2024 திங்கட்கிழமை காலை 10.00 மணி | குத்தாலம் மேற்கு ஒன்றியம் | ஸ்ரீமதி திருமண மஹால் – கோமல் |
| 26.08.2024 திங்கட்கிழமை மாலை 3.00 மணி | மயிலாடுதுறை மத்திய ஒன்றியம் | பத்மவாசன் திருமண மண்டபம், மயிலாடுதுறை. |
| 27.08.2024 செவ்வாய்கிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் மத்திய ஒன்றியம் | அமிர்தயோகா மஹால் திருக்கடையூர், |
| 27.08.2024 செவ்வாய்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் கிழக்கு ஒன்றியம் | பி.எம்.எஸ். திருமணமண்டபம், மங்கைநல்லூர், |
| 28.08.2024 புதன்கிழமை காலை 10.00 மணி | சீர்காழி கிழக்கு ஒன்றியம் | அங்காளபரமேஸ்வரி மண்டபம் சரபோஜி அக்ரஹாரம், சீர்காழி, |
| 28.08.2024 புதன்கிழமை மாலை 4.00 மணி | கொள்ளிடம் மேற்கு ஒன்றியம் | அருண்பாலாஜி திருமண மண்டபம், கொள்ளிடம். |
| 29.08.2024 வியாழக்கிழமை காலை 10.00 மணி | செம்பனார்கோவில் தெற்கு ஒன்றியம் | ரமாட்டி திருமண மண்டபம், இலுப்பூர் சங்கரன்பந்தல் |
| 29.08.2024 வியாழக்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் வடக்கு ஒன்றியம் | ஒன்றிய தி.மு.க அலுவலகம், குத்தாலம், |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை மேற்கு ஒன்றியம் | நாராயணி மஹால், மயிலாடுதுறை. |
| 30.08.2024 வெள்ளிக்கிழமை மாலை 5.00 மணி | சீர்காழி நகரம் | சீர்காழி ஒன்றிய தி.மு.க.அலுவலகம் சீர்காழி தென்பாதி. |
| 31.08.2024 சனிக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம் | நிலவர் திருமண மண்டபம், மணல்மேடு, |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 4.00 மணி | குத்தாலம் பேரூர் | குத்தாலம் ஒன்றிய தி.மு.க அலுவலகம், |
| 31.08.2024 சனிக்கிழமை மாலை 6.00 மணி | கொள்ளிடம் கிழக்கு ஒன்றியம் | ஆர்.எம்.ஆர்.திருமண மண்டபம், கடவாசல். |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணி | மயிலாடுதுறை கிழக்கு ஒன்றியம் | அருண்மஹால், நல்லத்துக்குடி, |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை காலை 11.00 மணி | வைத்தீஸ்வரன்கோயில் பேரூர் | காவியா திருமண மண்டபம், வைத்தீஸ்வரன்கோவில். |
| 01.09.2024 ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி | தரங்கை பேரூர் | சீனிவாசா திருமணமண்டபம், பொறையார். |
| 02.09.2024 திங்கட்கிழமை காலை 11.00 மணி | மணல்மேடு பேரூர் | நிலவர் திருமணமண்டபம், மணல்மேடு. |

கூட்டம் குறித்து சம்பந்தப்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் செயலாளர்கள் முறையாக கூட்டம் அழைப்பிதழ்களை அச்சிட்டு கிளை, வார்டுகள் தோறும் வழங்கி கழகத்தினர் பெருமளவில் கலந்துகொள்ள கூட்டம் ஏற்பாடு செய்திட வேண்டுகிறேன்.

**நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ..**
செயலாளர்,
மயிலாடுதுறை மாவட்ட தி.மு.க.